பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 08 2026 FRIDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) விண்வெளித் துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) பன்றிக்காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3) தமிழகத்தில் உள்ள 22 திருக்கோவில்களில் 50 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

4) பழம்பெரும் திரைப்பட நடிகை சௌகார்ஜானகி இன்று சென்னையில் காலமானார்.

5) இருபது வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kajal தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

விண்வெளித் துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் நடத்தி வரும் இளம் தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்வெளித் துறையில் இந்தியா கடந்த சில ஆண்டுகளாக சாதனை படைத்து வருவதற்கு இவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளித் துறையில் மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு இந்த இளம் தொழில் முனைவோர்கள் வரவேற்பு தெரிவித்ததாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் பன்றிக் காய்ச்சல் பாதிப்புகளை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, இன்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆய்வின் போது, இந்த காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் தீவிரப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார்.

இதுதொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள 22 திருக்கோவில்களில் 50 கோடி ரூபாய் மதிப்பில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் பல்வேறு அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

>>>>><<<<<

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அரசு கார் வழங்கப்படும் என்ற அறிவிப்பை மாநில அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கார் தேவைப்படும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அரசு கடனுதவி வழங்கலாம் என்றும் யோசனை தெரிவித்தார்.

நிதி நிலைமையை காரணம் காட்டி, பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாத த.வெ.க. அரசு, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கார் வழங்க முடிவு செய்துள்ளது முறையானதல்ல என்று திரு. சண்முகம் கூறினார்.

>>>>><<<<<

மேகதாது அணை பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முதலமைச்சர் அழைப்பு விடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கையை கர்நாடக அரசு, மத்திய அரசிடம் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு இப்பிரச்சினையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதில் த.வெ.க அரசுக்கு உடன்பாடு இல்லை என்றால், அனைத்துக் கட்சி தலைவர்கள் அடங்கிய குழுவுடன் தில்லி சென்று பிரதமர் மற்றும் நீர்வளத்துறை அமைச்சரை சந்தித்து, தமிழகத்தின் கோரிக்கையை நேரில் வலியுறுத்த வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மேகதாது அணை விவகாரத்தில் அனைத்து கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் என்று த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கிருஷ்ணகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை கர்நாடக அரசிடமிருந்து பெற உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பெற்ற பின்னர், அனைத்து துறைகளிலும் லஞ்சம் குறைந்துள்ளதாகவும், இது வரவேற்கத்தக்கது என்றும் திரு. ஜி.கே. வாசன் கூறினார்.

>>>>><<<<<

விவசாயிகளுக்கான குறுவை தொகுப்பு திட்டத்தின் பயன்கள், முழுமையாகவும், உடனடியாகவும்விவசாயிகளுக்கு சென்றடைவதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறுவை தொகுப்பு அறிவிக்கப்பட்டு 2 மாதங்கள் முடிவடைந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வரும் விவசாயிகளுக்கு குறுவை தொகுப்பையும் உரிய நேரத்தில் வழங்காமல் காலம் தாழ்த்துவது தவறானது என்று அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் த.வெ.க. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. டி.டி.வி. தினகரன் கோரியுள்ளார்.

>>>>><<<<<

பழம்பெரும் திரைப்பட நடிகை சௌகார்ஜானகி இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 94.

திரைத்துறையில் 70 ஆண்டுகளுக்கு மேலாக பயணித்து, பத்மஸ்ரீ, கலைமாமணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

கதாபாத்திரங்களுக்கு, தமது வசனத்தின் மூலம் மெருகேற்றியதற்கு சான்றாக அவர் நடித்த எதிர்நீச்சல் திரைப்படத்தில் இடம்பெற்ற இந்த காட்சி விளங்குகிறது.

(சவுண்ட் பைட் - டயலாக் - 25 செகண்ட்ஸ்)

சௌகார்ஜானகி மறைவுக்கு முதலமைச்சர் திரு. விஜய், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், திரையுலகினர் மற்றும் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில், அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டம், கலியம்பூண்டி அரசு சுகாதார மைய வளாகத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான நிறைவடைந்த கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திருமதி. சினேகா இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் உயர்கல்வி வழிகாட்டு மற்றும் நேரடி சேர்க்கை முகாமை ஆட்சியர் திரு. விஷ்ணு மஹாஜன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

வட கோவை ரயில் நிலையத்தில் சேலம் ரயில்வே கோட்ட மேலாளர் திரு. பன்னா லால் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

கடலூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற கலைத் திருவிழாவை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

தருமபுரி சிறப்பு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில், சமரச விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்வாய்களில் வண்டல்கள், குப்பை கழிவுகள் மற்றும் ஆகாயத்தாமரை அகற்றும் பணிகளுக்கு ஏதுவாக ட்ரோன் மூலம் அவற்றை கணக்கெடுக்கும் பணிகளை ஆணையாளர் திரு. சமீரன் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

Slovakia-வின் Bratislava-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின், 76 கிலோ எடைப்பிரிவில் Kajal தங்கப்பதக்கத்தையும், 62 கிலோ எடைப்பிரிவில் Savita Dalal வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>><<<<<

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 19-21, 21-15, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Asuka Takahashi-யை வென்றார்.

>>>>>END<<<<<